# அரங்கக்கலை வளர்த்த புலவர் சு.செல்லத்துரை

ஆழத்து முத்துக்கள் 78

## அறுபதுகளில் அரங்கக்கலை வளர்த்த சைவப் புலவர் சு. செல்லத்துரை:

வலிகாமம் வடக்கின் அவைக்காற்று கலை உந்துசக்தியாகத் திகழ்ந்தவர்களில் முக்கிய மானவர் சு. செல்லத்துரை அவர்கள். இளவா லையில் பிந்திய முப்பதுகளில் பிறந்த இவர் இளவாளை மெய்கண்டான் வித்தியாலயத்தில் கல்வி கற்றவர்.

பாடசாலை நாட்களிலேயே இலக்கிய ஆர்வமும் கலை விருப்பும் கொண்டவராகத் திகழ்ந்தார். இவருடைய கலை ஆர்வத்தை தூண்டி விடுபவராகவும், ஒரு உந்து சக்தி யாகவும் திகழ்ந்தவர் மெய்கண்டான் வித்தி யாலய அதிபர்.

'துன்னாலையைச் சேர்ந்த சுப்பையா என்னும் தலைமை ஆசிரியர் இவரது கலை இலக்கிய ஆர்வத்தைத் தூண்டி வளர்த்தார். 'புலவர் புலவர்' என்று தனது மாணவனை அழைத்து 'பிற்காலத்தில் நீ ஒரு ஆக்கபூர்வ மனிதனா கத்திகழ்வாய்' என்றும் ஆசி கூறினார் என்று எழுதி வைக்கின்றார் கலைப்பேரரசு ஏ.டி.பொன் னுத்துரை அவர்கள்.

தெல்லிப்பழை கலை இலக்கியக்களம் 1998ல் சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்களின் மணிவிழா ஆண்டை முன்னிட்டு கலைப்பேரரசு ஏ.ட பொன்னுத்துரை அவர்களைக் கொண்டு 'அரங்கக் கலைஞர் ஐவர்' என்ற நூலை வெளியிட்டுள்ளது.

கலை இலக்கியக் களத்தினர் இந்நூல் வெளி யீட்டிற்கான வழிகாட்டியாகத் திகழ்ந்த களத் தலைவர் பேராசிரியர் நா.சுப்பிரமணிம் அவர்களுக்கும் கலாநிதி. செ. கிருஸ்ணராஜா, திருமதி கோகிலா மகேந்திரன், நூலை ஆக் கித்தந்த கலைப் பேரரசு ஆகியோருக்கும் நன்றி கூறியிருக்கின்றனர்.

சைவப் புலவர் செல்லத்துரை அவர்கள் மாணவனாக இருந்த ஐம்பதுகளில் நாடகம் என்ற கலைக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கவில்லை.

ஆதரவு இல்லை என்பது மட்டுமலல்லாமல் தூற்றுதல்களும் நடந்தேறிய காலம் அது. நாடகம் போடுபவர்கள் கூத்தாடிகள் என்று குட்டுப்பட்டனர். பாடசாலைகள் கூட நாடகத் துக்கு இடமளிக்கவில்லை. ஆதரவளிக்க- வில்லை. ஒரு சில கல்விக்கூடங்களில் ஆசிரி யர்கள் மாணவர்களுக்கு நாடகம் பழக்கினால், 'படிக்க வந்த பிள்ளைகளை மண்ணாக்கு கிறார்கள்' என்று சக ஆசிரியர்களும் பெற் றோர்களும் குறை கற்பித்த காலம் அது.

அப்படிப்பட்ட நாட்களில் நாடகம் நடித்து, நாடகம் பழக்கி, நாடகம் மேடையேற்றி நாட கத்துக்காகவே வாழ்ந்தவர்கள் உண்மையா கவே போற்றுதலுக்குரியவர்கள் தான்.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களும் அந்தவகையில் போற்றுதலுக்குரியவரே.

50களில் பாடசாலை மாணவனாக இருந்த போது இவர் பங்கேற்ற முதல் நாடகம் சோம சுந்தரப்புலவர் எழுதிய 'உயிரிளம் குமரன்' என்பதாகும். பாடசாலைக்காக இந்த நாட கத்தை தயாரித்து, நெறியாள்கை செய்து அரங்கேற்றியவர் அந்த நாட்களில் யாழ் நாடக உலகில் பிரசித்தம் கொண்டிருந்த சின்னையா தேசிகர் என்பவராகும்.

செல்லையா அவர்களின் தொடர்ச்சியான அரங்கியற் பணிகளுக்கு இந்த ஆரம்ப குரு வாக தேசிகர் அமைந்ததுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

முதல் நாடகமான 'உயிரிளம் குமரன்' நாட கத்தில் இவருக்கு ஒரு பெண் பாத்திரமே கிடைத்திருந்தது. ஒரு ஆண் பெண்ணாக நடிக்கும் போது கூடுதலான நடிப்பு நுட்பங் களை கற்றுக் கொள்ளுகின்ற வாய்ப்புக் கிடைக்கின்றது.

இவருக்குக் கிடைத்த முதல் ஆசிரியர் நிய மனம் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் ஆகும். அங்கும் நாடகப் பயிற்சி மற்றும் நாடகச் செயற்பாட்டுக்கான சூழலை ஏற்படுத்திக் கொண்டார் இவர். மன்னாருக்கென்று விசேடமான கூத்து மர- பொன்றுண்டு.

1960இல் நடந்த கலைக்கழகப் போட்டியில் இவர் தயாரித்து, நெறிப்படுத்திய 'தணியாத தாகம்' பரிசு பெற்றது. குரும்பசிட்டி சன்மார்க்க சபை இதே அறுபதுகளில் ஆண்டுதோறும் நாடகப் போட்டிகள் வைத்து தங்கப் பதக் கம் உட்படப் பரிசில்கள் கொடுத்து நாடகக் கலைக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வந்தது.

'தீந்தமிழ்த் தீ' என்ற இவரது நாடகம் கலை யரசு சொர்ணலிங்கம் முன்னிலையில் குரும்ப சிட்டி சன்மார்க்க சபையின் பரிசைப் பெற்றது.

1964ல் கரவைக் கிளானின் 'ஆதவனே மன் னிப்பாய்' நாடகத்தை தயாரிக்கத் தொடங் கினார்.

அறுபதுகளில் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுவின் தலைவராகப் பேராசிரியர் சு.வித்தி யானந்தனும் செயலாளராக பேராசிரியர் கா. சிவத்தம்பியும் இருந்தனர். ஆண்டு தோறும் நாடக விழா நடக்கும். 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற விழாவில் அரங்கியற்கலைஞர்



சு.செல்லத்துரை அவர்கள் தயாரித்து நெறிப் படுத்திய கரவைக்கிளான் எழுதிய 'ஆதவனே மன்னிப்பாய்' நாடகமும் மேடையேற்றப்பட்டது. அகில இலங்கை மட்டத்தில் முதல் பரிசி- னைப் பெற்றுக் கொண்டது.

மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, காரை நகர், பருத்தித்துறை போன்ற பல இடங்க ளில் இவருடைய நாடகங்கள் மேடை ஏற்றம் கொண்டன. அரச பதவி வகிப்பவர்கள் உயர் உத்தியோகத்தினர், நாடகக் கலையையும், நாடகத்தில் நடிப்பதையும் பங்கேற்பதையும் இழிவானது அநாகரீகமானது என்று புறக்க ணித்த அந்த நாட்களில் சுகாதாரத் திணைக் கள உயர் அதிகாரிகள் டொக்டர்கள் உட்படப் பலர் செல்லத்துரை அவர்களின் நாடகத்தில் பங்கேற்று நடித்துள்ளமைக்கு இவரது பண் பான நடத்தையும் வாழ்க்கை முறைகளுமே காரணமாகின்றன. ஒழுக்கமும் ஆற்றலும் ஒருங்கே பெற்ற இந்த நாடகக் கலைஞர் மற்றவர்கள் மத்தியிலும் கற்றவர்கள் மத்தி யிலும் மதிப்புப் பெற்றமை வியப்பானதல்ல.

மன்னாரில் நாடகத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த போது அங்குள்ள சில நடிக நண்பர்களுடன் அடிக்கடி யாழ்ப்பாணம் சென்று கலையரசு சொர்ணலிங்கம் அவர்களிடம் நாடகமேடை யேற்றம், ஒத்திகை சம்பந்தமான பிரச்சினை களைப் பேசி தீர்வு கண்டு கொள்வாராம்.

1969ல் காரைநகர் ஈழத்துச் சிவன் கோவில் நிர்வாகம் கோவில் நிதிக்காக ஒரு நாடகம் நடத்தத் தீர்மானித்து அதற்கான பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தது. இளவாலையிலிருந்து ஒவ்வொரு நாளும் காரை நகர் சென்று நாடகத்துக்கான செயற்பாடுகளை மிகவும் சுறுசுறுப்பாய்க் கவனித்தார்.

ஈழத்துச் சிவன் தேவஸ்தான நிர்வாகத்தினர் இந்த நாடகத்தை கொழும்பில் அரங்கேற்றத் திட்டமிட்டிருந்தனர். அதற்கேற்பவே 'மணி யோசை' என்ற நாடகத்தை நெறிப்படுத்தி வெற்றியீட்டினார். தேவஸ்தானம் தங்கப் பதக்க மீந்து கௌரவித்தது.

நாடகத்துறைக்கு இளைஞர்களை உள்வாங்கி ஊக்குவிக்கவும் உற்சாகப்படுத்தி ஒத்துழைத்து முன்னேற வழி செய்யவும் இவர் பின் நின்ற வர் அல்ல.

இளவாலை இளைஞர்கள் சிலர் ஒன்று சேர்ந்து 'இளவாலை இளங்குமரன் கலாமன்றம்' என் னும் பெயரில் ஒரு நாடக மன்றம் அமைத்து செயற்பட்டனர். தம்பு என்ற இளவாலைக் கிராமத்து இளைஞர் இந்த மன்றத்திற்கான தனது தீவிர உழைப்பை நல்கினார்.

நாடகத்துக்கு வேண்டிய சீன், திரை, ஒப்ப னைப் பொருட்கள் என்பவற்றை தானே வாங்கி மன்றத்துக்கு அளித்தார். ஊர்ப் பெரி யவர்கள் 'நாடகம் ஆடத்தானே' என்று முகம் திருப்பிக் கொண்டனர்.

சைவப்புலவரும், நல்லாசிரியரும், நாடக வல்லவருமாகிய சு.செல்லத்துரை அவர்கள் இந்த இளைஞர்களுக்கு உதவ முன்வந்தார்.

தனக்குத் தெரிந்ததை இளைஞர்களுக்குத் தர முன்வந்த அதேவேளை எதுவிதமான தாழ் வுச் சிக்கல்களுமின்றி இளைஞர்களிடமிருந்து தான் கற்றுக்கொள்ள வேண்டியவைகளைக் கற்றுத்தேர்ந்தார்.

ஒப்பனைக் கலையில் தேர்ச்சிப் பெற்றிருந்த தம்பு என்னும் இளைஞனிடமிருந்து ஒப்பனை – காட்சியமைப்பு போன்ற நுட்பங்களைக் கற்றுக் கொண்டார்.

ஆசிரியராக ஆரம்பித்து கல்விப் பணிகளாற்றி அதிபராய் உயர்ந்த சைவப்புலவர் பாடசாலை மட்டத்தில், மாணவர்கள் மத்தியில் நாடகக் கலையை வளர்த்தெடுக்க பெரும்பணி ஆற் றியவர்.

மேலை நாடுகளில் வயது, வகுப்பு என்பவற் றிற்கிணங்க பாடசாலைகளில் நாடக ஊட கத்தைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். முப்பதுகளிலேயே 'வகுப்பறை நாடகம்' என்ற நாடக முறைமை நடைமுறைக்கு வந்து விட் டது. மேற்கத்தியக் கல்வி உலகம் நாடகத் துறையை கல்விக் கூடங்களில் அறிமுகப் படுத்தியதுடன் முன்னிலைப் படுத்தியும் கொண்டது.

முப்பதுகளில் அவர்கள் செய்ததை 60களில் சிறிய அளவிலேனும் நமது கல்விக்கூடங்கள் நடைமுறைப்படுத்தத் தொடங்கின. பாடசாலை நாடகத்துறையை மேம்படுத்த உதவிய கல் வியலாளர்களில் நமது செல்லத்துரை அதிப ரும் முன்வரிசை பெறுபவர்.

எழுபதுகளில் கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியாற்றிய காலத்தில் இலங்கை கலைக்கழகம் பாட சாலை நாடகப் போட்டி நடாத்தியபோது வித் தியாலய அதிபர், ஆசிரியர்களை மாணவர் களுடன் இணைந்து செயற்பட வைத்து உழைத்து 'கலையால் அழிந்த கர்வம்' என்ற நாடகத்தை தயாரித்து போட்டியில் பங்குபெறச் செய்தார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி போன்ற பெரிய பாடசாலைகளுடன் எப்படிப் போட்டி யிட முடியும் என்று அங்கலாய்த்த அதிப ரையும் ஆசிரியர்களையும் சமாளித்து உற்சா கப்படுத்தி கலைக்கழகப் போட்டியில் கீரிமலை நகுலேஸ்வரா மாணவர்களின் நாடகத்தை

**- தெளிவத்தை ஜோசப் -**

மேடை ஏற்றினார். – 'கலையால் அழிந்த கர்வம்' கலைக்கழகப் பாடசாலைப் போட் டியில் இரண்டாவது பரிசினைப் பெற்றுக் கொண்டது.

இளவாளை மெய்கண்டான் மகா வித்தியா லயத்தின் அதிபராகப் பதவியேற்றதன் பின் பூரண சுதந்திரத்துடன் செயற்பட்டார். கல்வித் திணைக்களம் அப்போது வருடா வருடம் நாடகப் போட்டிகளை நடத்தியது.

1976ல் இவரது 'பாதுகை பெற்ற பரிசு' என்ற மாணவர் நாடகம் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தையும், 1977ல் 'கர்வ பங்கம்' முதல் இடத்தையும் பெற்றன.

இளவாலை இளங்குமரன் கலாமன்றத்தின ருக்காக ஆண்டுக்கு இரண்டு நாடகம் என்று இருபதுக்கும் மேற்பட்ட நாடகப்பிரதிகளை தயாரித்துக் கொடுத்துள்ளார்.

இவருடைய 'மாயவன் செய்த மாயை' நாட கத்தை மகாஜனக் கல்லூரி மேடை ஏற்றியமை குறிப்பிடத்தக்கது. இராவணன் நாடகம் இவராலேயே மெமோரியல் கல்லூரியில் மேடை ஏற்றப்பட்டது.

'சுப்ரீம் கோர்ட்டில் திரௌபதை' 'வயோதிபர் விடுதியில்' 'ஐயோ அம்மான்' 'கண்ணீர்' போன்ற சமூக நாடகங்களும் மேடையில் அலங்காரம் பெற்றன.


சமய நாடகம், நாட்டிய நாடகம், இசை நாடகம், கூத்து, பஜனை, வில்லுப்பாட்டு என்று இவருடைய நாடகப் பிரதிகளை பல நிறுவனங்கள் பயன்படுத்திக் கொண்டன.

நாடகக்காரர் பலரின் பழக்க வழக்கங்கள், பண்புகள் என்பவை சீர்கெட்டு நாடகக்காரர் கள் காவாலிகள் என்று சமூகம் எண்ணத் தலைப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அதற்குச் சவாலாய் நாடகம் ஒரு நற்கலை அதனை வளர்க்கப் பாடுபடும் நாடகக் காரர்கள் நல் லவர்கள் பண்பானவர்கள் என்பதை நிலை நாட்டிய அரங்கியல் பெரியார் இந்த சைவப் புலவர்.

நாடக மேடைகளில் ஆண்களே பெண் பாத் திரங்களேற்றுத் திரிந்ததொரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத்துக் கிராமியச் சூழலில் பெண் கள் நாடக மேடையில் ஏறுவார்களா, நடிப் பார்களா, நடிக்க விடுவார்களா.

அப்பேர்ப்பட்டதொரு காலகட்டத்தில் இவரு டைய ஒரு நாடகத்தின் பெண் பாத்திரத்துக் குப் பெண்ணே நடிக்க வேண்டும் என்னும் நிலை வந்தபோது, அந்தப் பாத்திரத்தில் தனது மனைவி சிவகாம சுந்தரியை நடிக்கவைத்து வெற்றி கண்ட அரங்கியல் விற்பன்னர் இந்த சைவப்புலவர்.

ஈழத்து நவீன நாடக உலகு இந்த அரங்கி யல் கலைஞருக்கு என்றும் கடமைப்பட்டது. போற்றவும் நினைக்கவும் மதிக்கவும் கடப்- பாடுடையது.



theliwathai.joseph@thaiveedu.com